# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா.13** **Date : 21.01.2026.**

| | |
|---|---|
| **Name : ஈஸ்வரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023 ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.10.2023 ம் தேதி சந்திரமதி, க/பெ செம்பா கவுண்டர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமாக புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.572/2023 ச/பி 279, 304(ஏ) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 7 கிலோமீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்தில் முதன் முதலாக தகவல் கிடைத்த நாள், நேரம் என்ற இடத்தில் 15.10.2023 ம் தேதி இரவு 8 மணி என கண்டுள்ளது என்றால் ஆமாம். அதற்கு முன்னர் காவல் நிலையத்திற்கு மேற்படி விபத்து குறித்து எவ்வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை என்றால்

ஆமாம். புகாரில் சொல்லியுள்ள சம்பவயிடத்திற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. எதிர்புறமாக ஒரு லாரி வேகமாக வந்து கொண்டிருந்த போது குறுக்கே இரு சக்கர வாகனத்தில் சென்றால் விபத்துஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. மேற்படி இறந்த நபரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**